மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஹவுஸ் கமிட்டியைக் கூட்டுகிறேன் என்று சொல்லிவிட்டேன். பிரச்னை தீர்ந்து விட்டது. இப்பொழுது மேலும் வளர்க்க வேண்டாம்.

(3) அறிவிப்பு
மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள், திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றுள்ளன என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது :

1. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு மதுவிலக்குத் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1979);

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப்பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1979).

(4) உரிமைப் பிரச்னைகள்

(அ) அலைஓசை, முரசொலி, தினகரன் நாளேடுகள் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனை.

9-3-1979 அன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் சின்னசேலம் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் ஒரு அவையுரிமை மீறல் குறித்த பிரச்சனையை எழுப்பினார்கள். 6-3-1979 அன்று பேரவையில் எழுப்பப்பட்ட சில கோஷங்கள் பேரவைத் துணைத் தலைவரால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருந்தும், 6-3-1979 தேதியிட்ட ''அலை ஓசை'' நாளேட்டிலும், 7-3-1979 தேதியிட்ட ''தினகரன்'' மற்றும் ''முரசொலி'' ஆகிய நாளேடுகளிலும் வெளியிடப்பட்டிருந்தன என்றும், இது அவை உரிமை மீறிய செயலாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். உரிமை மீறல் பிரச்சனை பத்திரிகைகள் மீது இருப்பதால், அப்பத்திரிகைகளுக்கு எழுதிக் கேட்டு, பின்னர் என் தீர்ப்பை வழங்குவதாக நான் அறிவித்திருந்தேன்.

இப்பிரச்சினை குறித்துக் கேட்டதற்கு, ''அலை ஓசை'', ''தினகரன்'' நாளேடுகளின் ஆசிரியர்கள் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளனர்.